**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 121/2022** | **நாள் – 20.11.2025** | **சாட்சி – ம.சா.2** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.விக்னேஷ் | தந்தை பெயர் | திரு.கோபால் |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கும்பகோணம் | வயது | 30 |

**முதல் விசாரணை:**

நான் வட்டார போக்குவரத்து கழகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சாட்சி அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன்.

1. வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கிய அனுமதிக் கடிதம் **சா.சா.ஆ.1.**

2. TN 49 CC 4452 பதிவெண் கொண்ட கார் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.2**.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு விபத்து சம்பந்தமாக இரண்டு வாகனங்கள் எங்கள் அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். இருசக்கர மோட்டார் வாகனத்தின் பதிவெண் என்னவென்றால் TN 49 AY 1603 Passion Pro வாகனமாகும். அந்த இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்கண்ட ஆய்வறிக்கையின்

பதிவிறக்க நகல் எ.ம.சா.ஆ.1 ஆக MCOP NO.117/2022 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் பெயர் ராஜ் முகமது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாகனத்தின் ஓட்டுனர் பெயர் அய்யப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருசக்கர மோட்டார் வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்று மேற்கண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்காக அபராதம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். காப்பீடு பாலிசி இல்லாத வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி குற்றம் என்றால் சரிதான்.

Typed to my dictation in open Court, read over to the
Witness. Admitted and acknowledged by him/her
to be Correct.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.20 14:51:28 +0530

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.